Women and Media Collective
Established 1984

# பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் மற்றும் தற்போதைய நெருக்கடி

## சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கான மனித உரிமைகள்சார் அணுகுமுறை என்ன?


இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களுக்கான நீண்ட வரிசைகள்

இலங்கையில் தற்போது நிலவுகின்ற நெருக்கடியைக் கவனத்திற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளின் தாக்கங்களைப் புரிந்துகொள்ளும் பொருட்டு, பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பானது (இலங்கை), நியூ யோர்க பல்கலைக்கழக கலட்டின் மனித உரிமை முன்னெடுப்பு எனும் அமைப்புடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியது. ராதிகா குமாரசுவாமி மற்றும் வாசுகி நேசையா தலைமையில் தீபிகா உடகம, பிலிப் அல்ஸ்டன் மற்றும் மைக்கேல் பக்ரி ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் நாட்டில் சமூக செலவினம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த சாத்தியமான குறைப்பு நடவடிக்கைகளின் பாதக விளைவு ஆகியன பற்றிக் கலந்துரையாடினர்.

பொருளாதார சமூக மற்றும் கலாச்சர உரிமைகள் பொருளாதார ஸ்திரத்தன்மையை வழங்குகின்றன, இவை பொருளாதார ஸ்திரத்தன்மையின் வினைவுகள் அல்ல. மக்களின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் இரண்டிலும் முதன்மையான கவனம் செலுத்தி பொருத்தமான திட்டத்தை முன் வைப்பது முக்கியமானது.

இப்பொருளாதார நெருக்கடி, ஆட்சி நிருவாகத்திலும் அத்துடன் அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையும் ஒன்றையொன்று கண்காணித்துக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பலவற்றை நீக்கிய அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தச் சட்டத்தினால் நிலைபெற்ற நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையிலும் ஏற்பட்ட ஒரு நெருக்கடியாக காணப்படுகின்றது. எனவே, பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் உட்பட எல்லா உரிமைகளையும் கோருவதற்கு கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கும் ஒருங்கு சேர்வதற்குமான சுதந்திரம் ஆகியன பற்றிய உரிமைகள் பிரிக்கப்படாதிருத்தல் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது. வரலாற்று ரீதியாக நோக்கினால், மனித உரிமைகள் சமூகம் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் குறித்து குறைந்தளவு கவனமே செலுத்தியுள்ளது. எனவே, மனித உரிமைகள் சமூகம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஈடுபாடுகொண்டு செயலாற்ற முடியுமாக உள்ளதைப் போன்றே, மனித உரிமைகள் என்ற வகையில் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளின் முக்கியதத்துவம் பற்றி எதிர்ப்பாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டியதும் அவசியமாகும்.

நிறுவனஞ்சார் மறுசீரமைப்பு என்பது சர்வதேச நாணய நிதியத்தின் உத்தியோகபூர்வ பரிமாணத்திற்கு அப்பாற்பட்ட விடயமாக உள்ளதென்பதுடன், ஒரு சர்வதிகார முறைமையிலிருந்து நகர்வதற்குத் தேவைப்படும் ஆழமான நிறுவனஞ்சார் மறுசீரமைப்பு பற்றி பேச்சுவார்த்தைகள் கூட தெரிவிக்காது. மேலும், சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் சமூகத்திலுள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களிற்கு ஒருபோதும் சேவையாற்றாத நவ தாராளவாத விழுமியங்களையும் கொள்கைகளையுமே ஊக்குவிக்கின்றன. ஆலோசனை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சமூகப் பாதுகாப்பு வலைகள், அரசியலமைப்பு ரீதியில்அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுடன் மிகவும் வரையறுக்கப்பட்ட ஒரு தொடர்பையே கொண்டுள்ளன என்பதுடன் அவை கொள்கைப் பகுப்பாய்வுக்கான அடித்தளம் ஒன்றையும் உருவாக்குகின்றன..

இலங்கை அரசியலமைப்பு இதனை அங்கீகரிக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளும் அதேவேளை, இந்த உடனடி நடவடிக்கைக்கு நாம் எவ்வாறு அழுத்தம் கொடுத்து மேலதிக பாதிப்பைத் தடுக்கின்றோம் என்பது குறித்தும் கருத்திற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயன்முறைக்கு ஆதரவாக நிற்பது கால விரயத்தை ஏற்படுத்தும் என்பதால் தனியார்மயமாக்கல் இடம்பெற்றிருக்கும் என்பதுடன் பொருளாதார மட்டத்தில் கீழ்நிலையில் உள்ள மக்களுக்கு பாரிய செலவில் மிகக் குறைந்தளவு சேவைகளே வழங்கப்படும்.

எனவே, இளைஞர்கள் தலைமையிலான இயல்பான ஆர்ப்பாட்டங்கள் ஒருமைப்பாட்டை ஒன்றுதிரட்டி அதனை விரிவாக்கும் புதுமையான பொறிமுறைகளுக்கான திட்டத்துடன் இணைந்த போராட்டத்துக்கு இன்றியமையாத ஒன்றாகும். முடிவெடுக்கும் செயன்முறையின் ஒரு பகுதியாக, மக்கள் இயக்கங்களுடனும் தொழிற் சங்கங்களுடனும் இடம்பெற்ற சகலவற்றையும் உள்ளடக்கும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் தேசிய அரசாங்கம் என்பவற்றுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளில் வெளிப்படைத்தன்மை முக்கியமானதாகும். மனித உரிமைகள் என்பன ஈற்றில் மக்களின் சக்தியே என்பதுடன் எமது கரிசனைகள் மனித உரிமைகள் சார்ந்த மொழியில் வடிவமைக்கப்படவும் வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் பொருளாதார ஸ்திரத்தன்மையை மனித உரிமைகளுக்கான முன் நிபந்தனையொன்றாகக் கருதுகின்றது. எவ்வாறிருப்பினும், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பொருளாதார ஸ்திரத்தன்மையை வழங்குகின்றன என்பதுடன் அவை பொருளாதார ஸ்திரத்தன்மையின் விளைவானவையும் அல்ல. பொருளாதார நீதிக்கான பெண்ணியலாளர்களின் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டதைப் போன்ற, விசேட அறிக்கையாளர்களிடமிருந்தான உதவியுடனும் விசேட நடவடிக்கைமுறைகளுடனுமான முன்மொழிவுகள், அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் பொறுப்புக்கூறலைப் பேணச செய்வதற்காகப் பயன்படுத்தப்பட முடியும்.

சர்வதேச நாணய நிதியம் மீது பொதுமக்களின் அழுத்தத்தை வைத்திருப்பது இன்றியமையாததாகும். பேச்சுவார்த்தைச் செயன்முறைகள் ஜனநாயகத்துக்கு அப்பாற்பட்டவை என்பதால், பகிரங்கமானவையும் மக்கள் தாமாகவே உருவாக்கிக் கொண்டவையுமாக உள்ள அத்தகைய திட்டங்களுக்கு எதிராக அவை அளவிடப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்களானவை ஊழல் மற்றும் சுயநலக் கொள்கைகளால் இன்னலுற்றவர்களுக்கு உண்மையில் ஒரு சிறந்த வாழ்க்கையைக் கொண்டுவரப் போகின்ற நடைமுறைச் சாத்தியமுள்ள இலக்கொன்றை உறுதிப்படுத்தும் பொருட்டு, மனித உரிமைகள் சமூகமானது பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை ஒரு தொடக்கப் புள்ளியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.